பட்டப்பகலில் இரட்டைக் கொலை உட்பட இரண்டு நாளில் 9 கொலைகள்!

என்ன செய்கிறார் 'டம்மி' முதலமைச்சர் ?

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கேள்வி!

சென்னை, அக்.1-

"பட்டப்பகலில் இரட்டைக் கொலை உட்பட இரண்டு நாட்களில் 9 கொலைகள் நடந்துள்ளது. 'டம்மி' முதலமைச்சர் என்ன செய்துகொண்டிருக்கிறார்.?" என்று சட்ட மன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து அவர் தமது சமூக வலை தளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

பட்டப்பகலில் இரட்டைக் கொலை உட் பட 2 நாட்களில் 9 கொலைகள் - என்ன செய்கிறார் Dummy முதலமைச்சர்?

திருநெல்வேலியில் டால்டன் மற்றும் நிக்கோலஸ் என அண்ணன் தம்பி இருவர் பட்டப்பகலில் குத்திக்கொல்லப் பட்டுள்ள சம்பவம் கடும் அதிர்ச்சியை ஏற் படுத்தியுள்ளது.

இதேபோல, சென்னை ஐஸ் ஹவுஸில்



கஞ்சா விற்பதில் ஏற்பட்ட போட்டியில் அஜித் என்னும் இளைஞரை ஒரு கும்பல் வெட்டிக் கொலை செய்துள்ள கொடூரமும் அரங்கேறியுள்ளது.

குற்றத்தைத் தடுக்க வேண்டிய காவலர்களுக்கும் இந்த ஆட்சியில் பாது காப்பு இல்லை என்பதற்கு சாட்சியாக, பரமக்குடியில் பெண் காவலர் கண்ணகி, கீழே தள்ளிவிடப்பட்டு உயிரிழந்து இருக் கிறார்.


இது தவிர, மயிலாடுதுறை, திருவண் ணாமலை, சேலம், கன்னியாகுமரி, தேனி, கூடலூர் என கடந்த 2 நாட்களில் மட்டும் 9 கொலைகள் நடந்து இருக் கின்றன.

இப்படி கொத்துக்கொத்தாக கொலை கள் நடந்து கொண்டிருக்க, யாருக்குமே பாதுகாப்பற்ற இந்த Reels ஆட்சியை யாருக்காக நடத்துகிறார் முதலமைச்சர்?

இனியும் மிக்சர் சாப்பிட்டிக் கொண்டி ருக்காமல் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட முதலமைச்சர் உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்ய்யா; தொடர்ந்து லீவு வந்தாலே பஸ் கட்டணம் பல மடங்கு உயர்த்திடறாங்களே. இந்த த.வெ.க. கவர்ன்மெண்ட்டும் இதை கண்டும் காணாம இருக்கே... என்ன காரணமா இருக்கும்?

போண்டி : ஆமாய்யா; நீ சொல்றதும் சரிதான். கண்டும் காணாமல் இருக்கிறதுக்கும் த.வெ.க. 'கட்டணம்' விதிச்சிருக்குமோ என்னவோ. யார் கண்டது!

மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் பெயர் தி.மு.க.

கனிமொழி இராஜாத்தி கருணாநிதி எம்.பி. பேச்சு... முதல் பக்கத் தொடர்ச்சி

எனவே அன்புத் தம்பி விஜய் அவர் களே, தூய சக்தி என்று சொல்லும் தகு தியை நீங்கள் எப்போதோ இழந்துவிட்டீர் கள். ஆட்சிக்கு வருவதற்கு முன்பே வரி ஏய்ப்பு (IT case) வழக்கில் சிக்கியவர் நீங் கள்; உங்களால் எப்படித் தூய சக்தியாக இருக்க முடியும்.

திரும்பத் திரும்ப மேடையேறி தீய சக்தி, தூய சக்தி, திமுக என்று பேசும் உங்கள் உரையின் ஸ்கிரிப்ட்டை மாற்றிக்கொள் ளுங்கள். கடந்த நான்கு மாதங்களாக ஒரே திரைப்படத்தைப் பார்த்துப் பார்த்து மக்கள் சலிப்படைந்துவிட்டார்கள். ஸ்கி ரிப்ட்டை மாற்ற முடியவில்லை என்றால், அதை எழுதுபவரையாவது மாற்றுங்கள்.

பெண்களுக்குப் பாதுகாப்பில்லை, சட் டம் ஒழுங்கு சீர்குலைந்துவிட்டது என்று கூறி ஆட்சிக்கு வந்தீர்கள். 12 மணிக்குக் கூட உடலெல்லாம் நகைகளை அணிந்து கொண்டு நிம்மதியாக நடந்து செல்ல முடி யும் என்று திரைப்படத்தில் பார்த்த அன்புத் தம்பி விஜய்யை நம்பி மக்கள் வாக்களித் தார்கள். ஆனால், ஆட்சிப் பொறுப்பேற்ற நான்கே மாதங்களில் 550 குற்றங்கள் நடந்துள்ளன. அதில் 200க்கும் மேற்பட்ட கொலைகள், 300க்கும் மேற்பட்ட பாலி யல் வன்கொடுமைகள், 8 காவல் மரணங் கள் மற்றும் 10 ஆணவக் கொலைகள் அடங்கும். இதுதான் நீங்கள் தமிழ் நாட்டை காப்பாற்றும் லட்சணமா என கேட்க வேண்டியுள்ளது.

நண்பா, நண்பீஸ்களுக்கு என்ன செய்தார் தம்பி விஜய்!

தேர்தலுக்கு முன்னால், நண்பாஸ், நண்பீஸ், வீட்டில் அடம் பிடித்துப் பெற்றோ ரிடம் வாக்கைப் பெற்றுத் தாருங்கள் என்று கேட்கத் தெரிந்த முதலமைச்சர் தம்பி விஜய், அந்தச் சிறுவர்களுக்காக என்ன செய்தார். மதுரையில் கழிவுநீர்க் குட்டையில் 16 வயது சிறுவன் படுகொலை செய்யப்பட்டுக் கிடந்தான். அதற்காக நியா யம் கேட்ட பெற்றோரை காவல் துறையி னர் கழுத்தில் மிதித்துக் கைது செய்து இழுத்துச் செல்கிறார்கள்.

முதலமைச்சர் விஜய் பிரச்சாரம் செய்த வண்டலூர் அருகே 10ஆம் வகுப்பு படிக் கும் மாற்றுத்திறனாளிச் சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டார். ஆனால், அந்த விவகாரம் வெளிவராமல் இருக்க அச்சிறுமி தேர்வு எழுதப் பயந்து நாடகமாடுகிறார் என்று கூறியதுதான் இந்த த்தவெக ஆட்சி. ஒரு குழந்தைக்கு நேர்ந்த அவலத்தைக்கூட மறைக்க நினைக்கும் இரக்கமற்ற, மனிதநேயமற்ற ஆட்சியைத் தான் தம்பி விஜய் நடத்திக்கொண்டிருக் கிறார்.

நம்முடைய தலைவர் அண்ணன் தள பதி கூறியதைப் போல, இந்த ஆட்சியில் மின்வெட்டிற்கும் அரிவாள் வெட்டிற்கும் தான் போட்டியே நடக்கிறது. நாம் கேட் டால் ஃபியூஸைப் பிடுங்கிச் சென்றுவிடு கிறார்கள் என்ற சாக்கு போக்குக் கூறுகி றார்கள். நான்கு மாதங்களாக ஃபியூஸைப் பிடுங்கிச் செல்பவர்களைக் கூடக் கண்டு பிடிக்க முடியாத கையாலாகாத ஆட்சியா கவே இது உள்ளது. திமுக ஆட்சியில் அண் ணன் நேரு மின்சாரத்துறை அமைச்சராக இருந்தபோது இப்படி நடந்திருந்தால் விட்டு விட்டிருப்பாரா. இந்நேரம் அவரை கைது செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டி ருக்கும்

வேலையில்லாப் பட்டதாரிக்கு மாதம் ரூ.4,000 வழங்கப்படும் என்றீர்கள்; பணமும் வரவில்லை, தனுஷும் அரசிய லுக்கு வந்துவிடுவார் போலிருக்கிறது. பெண்களுக்கு ரூ.2,500 தருவதாகக் கூறியதும் நிறைவேற்றப்படவில்லை. திமுக ஆட்சியில் முறையாக வழங்கப் பட்டு வந்த முதியோர் உதவித்தொகையும் இப்போது பலருக்கு நிறுத்தப்பட்டுவிட்டது.

லண்டன் பயண நாடகம்!

விவசாயக் கடன் ரத்து என்று அறிவித் தீர்கள். ஆனால், தண்ணீர் திறக்கும் நேரம் தெரியாமல் பயிர்கள் காய்ந்து நிற் கின்றன. இவர்களோ லண்டனுக்குச் சென்று முதலீட்டு முகாம் நடத்துவதாகக் கூறி நாடகமாடுகிறார்கள். டெல்லி நொய் டாவில் உள்ள நிறுவனத்தின் முதலீட்டைப் பெற லண்டனுக்கு ஏன் செல்ல வேண்டும். விஜய்க்கு டெல்லிக்குச் செல்ல என்ன பயம்

> **"அன்புத் தம்பி விஜய் அவர்களே, தூய சக்தி என்று சொல்லும் தகுதியை நீங்கள் எப்போதோ இழந்து விட்டீர்கள். ஆட்சிக்கு வரு வதற்கு முன்பே வரி ஏய்ப்பு (IT case) வழக்கில் சிக்கியவர் நீங்கள்; உங்களால் எப்படித் தூய சக்தியாக இருக்க முடியும்."**

ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் கோடி ரூபாய் முதலீடு ஈர்த்திருப்பதாகக் கூறுகிறீர் கள்; ஆனால் ஊடகங்களை உள்ளே அனு மதிக்கவில்லை. கொடுத்த வாக்குறுதி களை நிறைவேற்றப் பணமில்லை என்று கூறிவிட்டு, சட்டமன்ற உறுப்பினர்களுக் குக் கார்களும், ரூ.7 கோடியில் புதிய அலு வலகமும், ரூ.1,200 கோடியில் புதிய சட்டமன்றக் கட்டிடமும் எதற்காக கட்ட முடிவு செய்தீர்கள்.

மக்கள் அனைத்தையும் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். தம்பி விஜய், இந்த நாடகமும் ரீல்ஸ்களும் தமிழ் நாட்டில் ரொம்ப நாள் செல்லுபடியாகாது. யார் உண்மையான தீய சக்தி, யார் மக் களுக்குத் தூரமான சக்தி, யார் தீர்ந்துபோன சக்தி என்பதை மக்கள் தெளிவாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். சட்டமன்றத்தில் நான் பதில் பேசும்போது ஓடிவிடாதீர்கள் என்று எதிர்க்கட்சிகளைப் பார்த்துக் கூறி விட்டு, கேள்வி கேட்டு முடிப்பதற்குள் அவரே ஓடிவிடுகிறார்.

மதுராந்தகத்தில் பேசும்போது பாஜக தான் திமுக என்கிறார். ஆனால், தேசிய சராசரியை விட 4.4% தமிழ்நாட்டின் விலைவாசி உயர்வை 5.44% உயர்த்தி சாதனையாக்கியதுதான் உங்கள் சாதனை. மின்வெட்டு, அரிவாள் வெட்டு, விலை வாசி உயர்வு இவைதான் உங்கள் ஆட்சி யில் நிகழ்ந்த சாதனைகள்.

எங்களைப் பார்த்துப் பாஜகவின் தமிழ் நாடு பிரிவு என்று கூறுகிறீர்களே, நம்மு டைய தலைவர் என்றைக்காவது பிரதமர் மோடியையோ, அமித் ஷா அவர் களையோ, பாஜகவையோ விமர்சிக்கத் தயங்கியது கிடையாது. நாடாளுமன்றத் தில் பிரதமரையும் உள்துறை அமைச்ச ரையும் எதிர்த்துப் போர்க்கொடி தூக்கிய வர்கள் திராவிட முன்னேற்றக் கழக நாடா ளுமன்ற உறுப்பினர்கள்.

100 நாள் வேலைத் திட்டத்தைச் சீர் குலைக்கும் சட்டத்தைக் கொண்டு வந்த போது அதை எதிர்த்துப் பேசியது நான். அதற்கு எதிராகச் சட்டமன்றத்தில் தீர்மா னம் கொண்டு வந்தவர் நம்முடைய முத லமைச்சர் அண்ணன் தளபதி மு.க. ஸ்டாலின். இந்த ஆண்டு மட்டும் தமிழ் நாட்டிற்கான வேலைவாய்ப்புகள் 50% வரை குறைக்கப்பட்டிருக்கிறது. இதை எதிர்த்து ஒரு வார்த்தையாவது அன்புத் தம்பி விஜய் கேட்கவில்லை.

பா.ஜ.க. பற்றி பேசினால் அவைக்குறிப்பிலிருந்து நீக்கம்!

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் வன்னியரசு அவர்கள் சட்டமன்றத்தில் மோடியைப் பற்றிப் பேச எழுந்தபோது, ஐயோ, அதைப் பற்றியெல்லாம் இங்குப் பேசவேண்டாம் என்று பயந்து அவைக் குறிப்பில் இருந்து நீக்கிய வீராதிவீரர் தான் இந்த அன்புத் தம்பி விஜய்.

இன்றைக்கு நாடு முழுவதும் தேர்தல் ஆணையத்தைப் பற்றிப் பேசிக்கொண்டி ருக்கிறது. மூன்று தேர்தல் ஆணையர் களில் ஞானேஷ்குமார் என்பவர் தன்னிச் சையாகச் செயல்பட்டு, 13 கோடிப் பேரை வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கியி ருக்கிறார் என 14 முறை புகார்கள் அளிக் கப்பட்டிருக்கின்றன. நம்முடைய தலை வர் அண்ணன் தளபதி மு.க.ஸ்டாலின் உட்பட அனைத்து தலைவர்களும் இதற்கு எதிராகப் போராடி வரும் நிலையில், முத லமைச்சர் விஜய் அவர்கள் இதை எதிர்த்து ஒரு வார்த்தைக்கூட பேசவில்லை.

இவர்களது ஆட்சியில் தமிழ்மொழி இன்றைக்கு மூன்றாம் இடத்திற்குத் தள் ளப்பட்டிருக்கிறது; தமிழ்த்தாய் வாழ்த்து புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. தமிழ் எனது உயிர் மூச்சு என்று கூறும் நீங்கள் இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்.

தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் தான் காண்டூர் கால்வாய் சீரமைக்கப்பட்டு விவசாயம் செழித்தது; கூட்டுறவுப் பயிற்சி மையம் கொண்டு வரப்பட்டது. அண் ணன் தளபதியின் ஆட்சியில் அரசுக் கல் லூரிகள், புறவழிச்சாலைகள், பேருந்து நிலையங்கள், அறிவுசார் மையங்கள் அமைக்கப்பட்டன. திருப்பூரின் வளர்ச்சிக் காக ரூ.1,400 கோடியும், நகராட்சி, பேரூ ராட்சிகளுக்கு நூற்றுக்கணக்கான கோடி நிதியும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தான் வழங்கப்பட்டது.

இத்தகைய நல்லாட்சி மீண்டும் மலர வும், தமிழ்நாட்டு மக்களை இந்தத் தீய சக்தியின் ஆட்சியிலிருந்து காப்பாற்றவும், அன்புத் தம்பி விஜய் அவர்களிடமிருந்து விடுவிக்கவும், உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்துச் சகோதரி சுகன்யா அவர் களைப் பெருவாரியான வாக்குகள் வித்தி யாசத்தில் வெற்றி பெறச் செய்யுங்கள்.

இவ்வாறு துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி இராஜாத்தி கருணாநிதி அவர்கள் உரையாற்றினார்.



தாராபுரம் இடை தேர்தலில் நீலகிரி மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள "நல்லாம்பாளையம் ஊராட்சிக்கு உட்பட்ட 242,243,244 ஆகிய வாக்குச்சாவடி பகுதிகளில், நீலகிரி மாவட்டக் கழக பொறுப்பாளர் குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் கே.எம்.ராஜ் ஆலோசனைப்படி, பூத் பொறுப்பாளர் சுப சந்திரசேகர் தலைமையில், நீலகிரி மாவட்டத்திற்கு உட்பட நிர்வாகிகள் வீதி வீதியாகச் சென்று வாக்கு சேகரித்தனர். உடன் கூடலூர் சட்டமன்ற உறுப்பினர் மு.திராவிடமணி, மாவட்டப் பொருளாளர் நாசர் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இளங்கோவன், தம்பி இஸ்மாயில், ஒன்றியச் செயலாளர்கள் காமராஜ், ஜெகதீசன், பொதுக்குழு உறுப்பினர்கள் மகேஷ், காளிதாசன், அணிகளின் நிர்வாகிகள் செந்தில்நாதன், LPF ஜெயராமன், பரூக், பிரதீப், நடனகுமார், வினோத், LPF ஆனந்தன், ஈஸ்வரன், தர்மராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



தாராபுரம் சட்டமன்ற இடைத்தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் கழக வெற்றி வேட்பாளர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து கழக மேற்கு மண்டல பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி வழிகாட்டுதலின்படி கொழுமம்குளி ஊராட்சி பகுதியில் அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர், க.பரமத்தி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் மஞ்சனூர் ஆர்.இளங்கோ வீடு வீடாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் சாலை சுப்பிரமணியன், ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.எஸ்.மணியன், எ.கருணாநிதி, செ.தா.கார்த்திக், வளர்மதி, குணசேகரன், பேரூர் கழகச் செயலாளர்கள் முரளி ராஜா அ.எஸ்.மணி, பொதுக்குழு உறுப்பினர் சாமிநாதன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.